செ.வெ.எண் : 923 நாள் : 06.12.2017

# காணாமல் போன மீனவர்கள் குறித்த தகவல் பரிமாற்றத்திற்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை துவக்கம்

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (06.12.2017) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசு கூடுதல் தலைமைச்செயலர் திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று ஒகி புயலினால் பாதிக்கப்பட்டு இதுவரை கரை திரும்பாத மீனவர்கள் மற்றும் படகுகளை மீட்பது குறித்து கடற்படை, கடலோர காவல்படை, காவல்துறை மற்றும் பல்வேறு அரசுத்துறை செயலாளர்கள் உடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தெரிவித்ததாவது:

கடலோர காவல்படை 30.11.2017 அன்று 5 கப்பல்கள், 3 சிறு மீட்பு விமானங்கள் மூலமாக கேரளா மற்றும் தமிழ்நாடு கடற்கரை பகுதிகளில் ரோந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அன்றைய தினம் கடலோர காவல்படை மூலம் 10 பைபர் படகுகளில் மீன் பிடிக்க சென்ற 71 மீனவர்கள் மீட்புக்குழுக்கள் மூலம் மீட்கப்பட்டுள்ளனர். மீட்பு நடவடிக்கைகளின் போது சில மீனவர்கள் படகை விட்டு வருவதற்கு தயங்கினர். இருப்பினும் மீட்பு குழுவினரால் உயிருக்கு ஆபத்து குறித்து எடுத்துரைக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளனர்.

இதுவரை கடலோர காவல் படையினர், தமிழ்நாட்டில் 233 மீனவர்களையும், கேரளாவில் 161 மீனவர்களையும், லட்சத்தீவு பகுதிகளில் 23 மீனவர்களையும் ஆக மொத்தம் 417 மீனவர்களை மீட்டுள்ளனர். தற்போது தமிழகம் மற்றும் கேரள கடல் பகுதிகளில் 369 கடல்மைல் தொலைவு வரை மீனவர்களை தேடுதல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்று கூட TN-258 என்ற பதிவு எண் கொண்ட விசை படகில் 110 கடல்மைல் அப்பால் இருந்து 8 தூத்துக்குடி மீனவர்கள் மீட்கப்பட்டுள்ளனர். மேலும், இந்திய கடற்படையினர் மூலமாக 158 மீனவர்களும், இந்திய விமானப்படையினர் மூலம் 25 மீனவர்களும் மீட்கப்பட்டுள்ளனர்.

ஒகி புயல் அன்று 39 படகுகளில் மீன்பிடி தொழிலுக்கு சென்ற 294 மீனவர்கள் காணாமல் போனதாக வரப்பெற்ற தகவலின் அடிப்படையில், இதுவரை 19 படகுகள், 229 மீனவர்கள் மீட்கப்பட்டு கரை பகுதிக்கு பாதுகாப்பாக கொண்டு வரப்பட்டுள்ளனர். ஆழ்கடல் மீன்பிடிப்பிற்காக 29.11.2017-க்கு முன்பாக கடலுக்கு மீன்பிடிப்பதற்காக 284 படகுகளில் சென்ற 2,420 மீனவர்கள் தமிழகத்தின் அருகாமை கடலோர பகுதிகளான கர்நாடகா, மகாராஷ்ட்ரா, குஜராத், இலட்சதீவு ஆகிய 4 மாநிலங்களில் பாதுகாப்பாக இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மீனவ கிராமங்களில் முன்னதாக மீன்பிடிக்க சென்ற 241 மீன்பிடி படகுகள் மற்றும் 2,570 மீனவர்கள் காணவில்லை என மீனவ பிரதிநிதிகள் புகார் தெரிவித்திருந்தனர். தற்போது 75 படகுகள் மற்றும் 945 மீனவர்கள் விபரங்கள் மட்டும் கிடைக்கப் பெறவில்லை என மீனவ பிரதிநிதிகள் 05.12.2017 அன்று தெரிவித்து பட்டியல் அளித்துள்ளனர். இதில் 669 மீனவர்களுடைய பெயர் பட்டியலை மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்கி உள்ளனர்.

இப்பட்டியலில் உள்ள ஒவ்வொரு மீனவர்கள் குறித்த தகவல்களின் மீது மேல் நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக, மாவட்டத்தில் உள்ள மீனவ கிராமங்களில் மீன்வளத்துறை, காவல்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொண்டு சரிபார்க்கும் பணி நிறைவடையும் நிலையில் உள்ளது. களஆய்வு தகவல்களை உறுதி செய்யும் பணியினை கண்காணிப்பு அலுவலர்களாக சார் ஆட்சியர், துணை காவல் கண்காணிப்பாளர், மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று இதுநாள் வரையில் கரை திரும்பாத மீனவர்கள் மற்றும் படகுகளை பாதுகாப்பாக மீட்பதற்கும் காணாமல் போன மீனவர்கள் குறித்த தகவல் பரிமாற்றத்திற்காகவும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை இன்று (06.12.2017) முதல் துவங்கப்பட்டுள்ளது. இக்கட்டுப்பாட்டு அறையில் கடற்படை, கடலோர காவல்படை, காவல்துறை, வருவாய்த்துறை மற்றும் மீன்வளத்துறை சார்ந்த அலுவலர்கள் 24 மணிநேரமும் தொடர்ந்து பணியாற்றுவார்கள். இதன் மூலமாக அனைத்து துறைகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, தகவல் பரிமாற்றம் ஒருங்கிணைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கண்காணிப்பு அலுவலர் டி.கே.ராமச்சந்திரன் இ.ஆ.ப., கூடுதல் கண்காணிப்பு அலுவலர் டாக்டர்.ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., வேளாண்மைத்துறை அரசு செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி,இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை அரசு செயலர் திரு.டாக்டர் கே.கோபால்,இ.ஆ.ப, வருவாய்த்துறை அரசு செயலர் டாக்டர்.பி.சந்திரமோகன்,இ.ஆ.ப., வேலைவாய்ப்பு பயிற்சித்துறை இயக்குநர் திருமதி.பா.ஜோதி நிர்மலாசாமி இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி முகமை இயக்குநர் திரு.பாஸ்கரன்,இ.ஆ.ப., மீன்வள்துறை இயக்குநர் திரு.வி.பி.தண்டபாணி,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான்,இ.ஆ.ப., தென் மண்டல காவல் துறை தலைவர் திரு.சைலேஷ் குமார் யாதவ்,இ.கா.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.துரை இ.கா.ப., இந்திய கடலோர காவல்படை அலுவலர் திரு.பாபு வெங்கடேஷ், கடற்படை கேப்டன் திரு. விஷால் குப்தா, துணை நேவி அலுவலர் திரு.விஜய் சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி.**